


தி.மு.க. பொறியாளர் அணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் நிர்வாகிகள் தேர்வு முறையை கழகத் தலைவர் தொடங்கி வைத்தார். தி.மு.க. பொறியாளர் அணி தனது உறுப்பினர் சேர்க்கை மற்றும் பகுதி / நகர / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகள் தேர்வினை தமிழ்நாடெங்கும் தொடங்கி உள்ளது. மாநிலப் பொறியாளர் அணி தங்களது அணியில் பொறுப்புக்கு விண்ணப்பித்திட QR Code வசதியுடன் கூடிய இணையப் பக்கத்தை வெளியிட்டுள்ளது. அந்த விண்ணப்பப் படிவத்துடன் கூடிய உறுப்பினர் சேர்க்கையை கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அறிவாலயத்தில் முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா உடன் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.10.2024 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திரைப் பயணம் மற்றும் வாழ்க்கை வரலாற்றை பற்றி விளக்கிடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கவிப்பேரரசு வைரமுத்து, சிவாஜி கணேசன் அவர்களின் மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### தேசத் தந்தை காணவிரும்பிய

# சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து காந்தியடிகளுக்கு காணிக்கையாக்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



சென்னை, அக். 4-

உத்தமர் காந்தியடிகளின் 156-வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தேசத் தந்தை காண விரும்பிய சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து அவருக்கு காணிக்கையாக்குவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 156வது பிறந்த நாளை யொட்டி சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திய பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அகிம்சை, உண்மை, மதநல்லிணக்கம் ஆகியவற்றின் முகமாகவே திகழ்பவர் காந்தியடிகள். அவரை இந்தியாவின் ஆன்மா என்றாலும் மிகையாகாது.**

**காந்தியார் வாழ்ந்த காலத்தைக் காட்டிலும் தற்போதைய சூழலில்தான் அவரது தேவை மிகுதியாக உள்ளது. இந்திய மக்களைப் பிளவுபடுத்தி, அப்பிரிவினைத் தீயில் குளிர்காயும் சக்திகளை வீழ்த்தி, தேசத்தந்தை காணவிரும்பிய சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து, அவருக்குக் காணிக்கை ஆக்குவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சிவகங்கையில் தீபாவளி பண்டிகையின முன்னிட்டு கதர் தள்ளுபடி விற்பனையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரைஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.